DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.19/2024**

Prosecution witness **PW.1 (LW.1)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Bharath Kumar | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : | | |

**(A1 produced. A2 present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **20.04.2026**

**20.04.2026 முதல் விசாரணை** :

1. நான் கேத்தி மைனலா ஜங்சனில் குடியிருந்து கோயம்புத்தூர் நவஇந்தியாவிலுள்ள ஒரு தனியார் ஐடி நிறுவனத்தில் எனது வீட்டிலிருந்து வேலை பார்த்து வருகிறேன்.

2. 07.09.2023ம் தேதி எனக்கு சொந்தமான TN 59 A 8382 பதிவெண் கொண்ட யமகா ஆர்.எஸ் 100 இருசக்கர வாகனத்தை மைலானா ஜங்சன் மெயின் ரோடு அருகில் காலை 7 மணிக்கு நிறுத்திவிட்டு நானும் எனது அப்பா, அம்மா ஆகியோர் திருப்பூருக்கு எனது சித்தியின் மகள் திருமணத்திற்காக பஸ்சில் சென்றோம். மீண்டும் 15.09.2023ம் தேதி காலை சுமார் 8.30 அல்லது 9 மணியளவில் மைலானா ஜங்சனுக்கு நாங்கள் வந்து பார்த்த போது நான் நிறுத்தி சென்ற இருசக்கர வாகனம் காணாமல் போயிருந்தது.

3. எனது நண்பர்களிடம் விஷயத்தை கூறி அக்கம் பக்கம் வாகனத்தை தேடிப்பார்த்தோம், ஆனால் கிடைக்கவில்லை. அன்றைய தினம் மதியம் சுமார் 2 மணியளவில் நான் கேத்தி காவல் நிலையம் சென்று எழுத்துமூலமான புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் அது. (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.**) எனது இருசக்கர வாகனத்தின் மதிப்பு சுமார் ரூ.55இ000/- இருக்கும்.

4. பின்னிட்டு மூன்று மாதம் கழித்து ஒரு நாள் ஒரு தேதியில் மாலை சுமார் 3 மணியளவில் கேத்தி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.நவீன்குமார் எனக்கு போன் செய்து காணாமல் போன எனது இருசக்கர வாகனத்தை கண்டுபிடித்துவிட்டதாகவும் அதை காவல் நிலையம் வந்து அடையாளம் காட்டுமாறும் கேட்டார். அதன்பேரில் நான் காவல் நிலையம் சென்று எனது இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டினேன். எனது இருசக்கர வாகனத்தை கனம் நீதிமன்றத்தில் உரிய மனு செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காடட்ப்படுட்ம புகைப்படத்தில் கண்டுள்ளது தான் எனது இருசக்கர வாகனமாகும். **அந்த புகைப்படம் அ.சா.ஆ.2 ஆகும்.** வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் அடிக்கடி வெளியூர் செல்லும் போது எப்போதும் நிறுத்துமிடத்தில் தான் எனது இருசக்கர வாகனத்தை நிறுத்தி சென்றேனா என்றால் ஆம். அன்றைய தினம் நான் எனது இருசக்கர வானத்தை மைலானா ஜங்சனில் நிறுத்திய போது அங்கு எத்தனை வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்றால் எனது வாகனம் மட்டும் தான் அங்கிருந்தது. நான் இருசக்கர வாகனத்தை நிறுத்தி சென்ற இடத்திற்கு அருகில் நிறைய குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். பேருந்து நிறுத்தத்திற்கு சற்று தூரம் தள்ளி கீழ்புறமாக நிறுத்தி சென்றேன்.

2. பேருந்து நிறுத்தத்திற்கு குன்னூரிலிருந்து செல்லும் போது இடதுபுறமாக நிறுத்தியிருந்தேன். பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் பெட்டிக்கடைகள் உள்ளது என்றால் சரிதான். நான் இருசக்கர வானத்தை நிறுத்திய போது அங்கு பொதுமக்கள் இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவயிட சாலை பொதுமக்கள் மற்றும் வாகன போக்குவரத்து அதிகமுள்ள பகுதி என்றால் சரிதான். 7ம் தேதி நாங்கள் திருப்பூர் சென்ற பிறகு யாருக்கேனும் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்களுக்கு போன் செய்தோமா என்றால் இல்லை. யார்

எனது இருசக்கர வாகனத்தை திருடி சென்றார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

3. நான் சொல்வது போல் எனது இருசக்கர வாகனம் காணாமல் போகவில்லை என்றும் புள்ளிவிவர கணக்கிற்காக போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2026.04.20 00:10:17 -0200

JUDICIAL MAGISTRATE,
COONOOR.